RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-222918

OPEN ACCESS

# கல்யாண்ஜியின் கவிதைகளில் அழகியலின் உளவியல்

**க. சுபலா [அ, *], க.ச. பவானி [அ]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# The Psychology of Aesthetics in Kalyanji's poems

**K. Shubala [a, *], K.S. Bhavani [a]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641 043, Tamil Nadu, India

* Corresponding Author: sbhavasanjay@gmail.com

Received: 22-09-2022
Revised: 01-11-2022
Accepted: 06-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Tamil literature has acquired many new dimensions starting from the time of Tolkappiyar till today. Everyday life is in harmony with nature. Nature is the concept of beauty and aesthetics from Sangam literature to modern literature. In poet Kalyanji's poems, love and nature find equal measure. He uses gentle words in his poems. Nature binds all living and non-living things in the world with its umbilical cord. If you see this world in the eyes of love, the psychology of beauty is the expression of the inner being of the humanbeings.

**Keywords:** Tamil literature, Kalyanji, Aesthetics, Psychology, Liberation, Love

## முன்னுரை

அழகுதான் வாழ்க்கை என்று கூறும் அளவிற்கு ஒரு பொருளை காணும் போது அகத்தினுள் எழும் உணர்ச்சிகளின் வெளிப்பாடானது வாழ்க்கையின் அர்த்தத்தினை நினைவு படுத்துகிறது. மனிதன் அவனை சுற்றி உள்ள இயற்கைச் சூழலை கண்டு மகிழ தொடங்கிய அன்றே அழகு உணர்ச்சியும் அரும்பியது எனலாம். மனிதனின் மன உணர்வுகள் இயற்கை காட்சிகளை கண்டு மயங்கி நிற்கிறது. சக மனிதன் மீதான அக்கறையின் வெளிப்பாட்டில் மனிதாபிமானம் எஞ்சி நிற்கிறது. மனிதன் தன் அக உணர்வுகளின் வழியில் நடந்தால் வாழ்வானது அழகுறும். கவிஞர் கல்யாண்ஜியின் கவிதைகளில் வரும் திருநெல்வேலி புளிய மரங்களுக்கும் வாதாம் மரங்களுக்கும் படித்துறைகளுக்கும் கல்மண்டபத்துக்கும் தன் சொற்களின் மூலம் நம்மை கைபிடித்து அழைத்துச் செல்கிறார். கருணையின் ஆதியூற்று அவரின் சொற்கள் ஒரு பறவை வானில் பறக்கும் பொழுது அதன் நிழல் தனிப்பறவையாக உருவகித்து கூறுவது போலான எழுத்துக்கள் இவருடையது.

## கவிதையும் உளவியலும்

மரபுக் கவிதைகளுக்கும் புதுக்கவிதைகளுக்கும் பின் தோன்றிய நவீன கவிதைகளின் பாடுபொருள்களானது உண்மையில் இவ்வுலகத்தில் இருக்கும் எதன் மேல் வேண்டுமானாலும் கவிதை எழுதப்படலாம் என்பதனை குறிக்கிறது. கவிதை ஒரு மொழியின் இலகியத் தன்மையை கொண்டுள்ளது. நவீன கவிதையின் இயங்குமுகம் அழகியல் என்ற மேலைநாட்டின் சூழலியல் தத்துவத்தையோ அமைப்பியல் வாதத்தையோ முழுமையாக ஏற்றுக் கொள்ளவும் இல்லை

முழுமையாக நிராகரிக்கவும் இல்லை. படிமங்கள் மற்றும் குறியீடுகளைக் கடந்து மேலே வரும் சமுதாயம், மக்களின் உணர்வுகளை பதிவு செய்வதற்கு ஒரு மொழியின் இலகுத் தன்மை கவிதை என்னும் இயல்புகளின் உணர்ச்சியை மொழிகளைக் கடந்து பரவுவதற்கு காரணமாகியுள்ளது. நாம் வாழும் இந்த அன்றாட வாழ்க்கையின் அக உணர்வுகளை எங்கே பொருந்திக் கொள்வது என்பதே கவிதை.

## அழகியலின் உளவியல்

கவிதைகள் அகத்தின் வெளிப்பாடே ஆகும். கவிதைகள் அழகியல் என்னும் பொருண்மையில் அதனை ஏற்றுக்கொள்ளப்படுதலின் ஒரு விதமான திறனாய்வு என்பதை தாண்டி அழகியல் கவிதைகள் மனித உளவியலுடன் நெருங்கிய தொடர்புடையவை கவிஞன் தன் மனதில் தோன்றும் பிம்பங்களை காட்சி படிமமாக மாற்றுகிறான் அது கவிதையை வாசிக்கும் ஒவ்வொரு மனிதனின் அகத்துள்ளும் காட்சியாக மாறுகிறது (Nadarajan, 2016). ஒரு கவிதையின் அழகு என்பது கவிஞன் இயற்கையின் மீது வைத்துள்ள அன்பினை காட்சிப்பாலமாக காட்டுகிறது. கவிதையினை மீள்வாசிப்புக்கு உட்படுத்தலே உளவியலின் தன்மையாகும் ஒவ்வொரு கவிதையிலும் மனிதனின் உளவியல் சமனளவு செல்வாக்கு செலுத்துகிறது. "கவிதை மனித உழைப்பிலிருந்து விளைந்தது" என்கிறார் ஜார்ஜ் தாம்சன் (Killiyan Patlar, 2016). உயிர்களிடத்து அன்பு வேண்டும் என்பதையே கவிஞர் கல்யாண்ஜியின் கவிதைகள் சுட்டிக்காட்டுகின்றது.

## பறவையும் வானமும்

பறவையும் மனிதனும் மனதளவில் ஒன்றுதான் உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் வானத்தில் பிறக்கும் எந்த ஒரு பறவையினைப் பார்த்தாலும் தாமும் அந்த பறவை போல் வானில் பறக்க வேண்டும் என்ற எண்ணமே வரும் கவிஞர் கல்யாண்ஜி தன் உலகத்தில் பறவைகளை பறக்க விட்டுக் கொண்டே இருக்கிறார் அவரின் வானம் அழகானது.

“முதலில் நமக்கு இறக்கைகள்
கிடையாது.
தன்னை மறந்த குரல்களில் பாடி ஒரு
நாளைத்துவங்கியும் பழக்கமில்லை.
இன்னொரு குரலில் உற்சாகத்தை
அனுமதிக்கிற பெருந்தன்மையும்
குறைவுதான் நம்மிடம்.
இரைதேடும் போது சண்டையிட்டு,
சண்டையிடும்போது சத்தமிடுகிறோம்,
இரையுடன் சார்ந்தது நம் இரைச்சல்.
பறவைகள் நமக்கு நேர் எதிர்.
காலையில் புலர்கின்றன
அவற்றின் குரல்கள்.
நமக்கு வானம் தெரிந்தால்
நல்லது”

பறவைகள் அதிகாலையில் எழுந்து அதன் குரலில் பாடி மகிழ்ந்து வானத்தினை சுற்றி வருகிறது நம்மை மறந்த குரலில் பாடி மகிழ்ந்து உறக்கத்திலிருந்து ஒரு நாளும் நாம் கண் விழிப்பதில்லை ஆனால் பறவைகள் நமக்கு நேர் எதிர். அதிகாலையில் கண்விழித்து எழுந்து நாம் வானத்தைப் பார்த்தல் என்பதே எவ்வளவு பெரிய வாழ்வியல் நிலை (Vannadasan, 2016).

வானத்தில் எத்தனை பறவைகள் பறந்தாலும் அதற்கான சுவடுகள் இல்லை. பறவைகள் தன் வாழ்நாள் முழுவதும் வானத்தில் பறந்து கொண்டே இருக்கும் ஆதிகாலத்து மனிதன் பறவைகளை பழமொழியில் ஏற்றினான் "உயர உயர பறந்தாலும் ஊர் குருவி பருந்தாகுமா?" என்பது எவ்வளவு பெரிய வாழ்வியல் தத்துவம். மனிதனின் மன உணர்வுகளை காலங்கள் கடந்தும் ஏதோ ஒரு சொலவடை மூலம் அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்கிறான் இலையுதிர் காலத்தில் முடிவில் வரும் அக்காக் குருவி இளவேனில் காலத்தை தொடங்கி வைக்கிறது மனிதர்கள் காலத்தை கணிக்க பறவைகளை பார்த்தனர் ஆனால் பறவைகள் சதா பறந்து கொண்டிருக்கிறது காலத்தின் வானத்தில்.

“அக்காக்குருவிச் சத்தம்

இலையுதிர் காலத்தை முடித்து வைக்கிறது

இல்லை

ஆரம்பித்து வைக்கிறது இளவேனில் காலத்தை

பொறு

பறவைகளின் சிறகு அறியாது

துவக்கி வைக்கவும் முடித்து வைக்கவும்

சதா அது

பறந்து கொண்டிருப்பது

அகாலத்தின் வானத்தில்”

கூண்டினில் அடைக்கப்பட்டு கிடக்கும் கிளிகளின் மனம் காதலில் திளைக்க அதற்கு பிறக்கும் கிளிக்கு சிறகுகள் ஏன் என்று வினவுகிறார் கவிஞர்.

கிளிகள்-2

கூண்டுக் கிளிகள்

காதலில் பிறந்த

குஞ்சுக் கிளிக்கு

எப்படி எதற்கு

வந்தன சிறகுகள்

ஒரு பறவையின் இயல்பு என்பது வானத்தில் பறப்பது தான், கூண்டில் அடைக்கப்பட்ட பின் அது எவ்வாறு பேசும்?

கிளிகள்-1

'பேசும் பார் என்கிளி'- என்றான்

கூண்டைக் காட்டி.

வாலில்லை

வீசிபறக்கச் சிறகில்லை

வானம் கைப்பட வழியில்லை.

'பேசும், இப்போது பேசும்' என

மீண்டும் மீண்டும் அவன் சொல்ல

பறவை என்றால்

பறப்பதெனும்

பாடம் முதலில் படியென்றேன்"

வானத்தில் எத்தனை பறவைகள் பறக்கிறது அத்தனை பறவைகளும் நம்மை பார்க்கிறதா என்பது நமக்கு தெரியாது ஆனால் நாம் அந்த பறவைகளைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

"பறவை என்னைப்

பார்த்துக் கொண்டு இருந்ததா

தெரியாது.

நான் பறவையை

பார்த்துக் கொண்டிருந்தேன்

அவ்வளவுதான்"

கவிஞர் நேசமித்திரனின் வரிகளில் ஒரு மரம் பறவையினை எவ்வாறு தாங்கிக் கொள்கிறது என்பதை அழகுற கூறுகிறார்.

"மீண்டும் மீண்டும் அதே கிளையில்

அமர்கிறது பறவை

அப்படி என்ன செய்து விட்டது மரம்

தாங்க தெரிந்திருக்கிறது"

## பூவும் மனமும்

ஒரு பூ பூப்பதைப் போல ஒரு பறவை பறப்பதை போல ஒரு செடி வளர்வதை போல தன்னை அறியாமல் மனம் நிரம்பி இருக்கும் இடத்தில் கவிதை வளரும். பூவின் வாசனை காற்று சுமந்து செல்கிறது அனைத்திடங்களில் இருக்கும்.

மலைகளின் ஊடே வரும் நீர்வீழ்ச்சியின் உச்சியிலிருந்து கீழே நிற்கும் என் மேல் விழும் பூ எத்தனை அபூர்வமானது அந்தப் பூ கீழ் நழுவி போகும் முன் என் நெஞ்சோடு அணைத்து கொண்டேன் என்பதை ஒரு சாபம், சாப விமோசனம் ஆகிறது என்பதனைக் கவிஞர்

"அருவியின் கீழ் நிற்கையில்

விழுந்தது இந்தப் பூ.

நனைந்த பறவை போல்

தோளில் அமர்ந்தது அது.

நழுவி போகும் முன் நான்

நெஞ்சோடு அணைத்துக் கொண்டேன்

ஒரு சாபம் போல,

சாப விமோச்சனம் போல"

இவ்வுலகில் பூக்கும் அனைத்து பூவிற்கும் ஏதோ ஒரு பெயர் உண்டு அந்த பூப்பெயர்கள் அனைத்தையும் அனைவரும் அறிந்திருக்க மாட்டார்கள். ஒரு பூவானது தன் இதழ்களை அனைத்தும் விரிக்கும் திசைகளிலும் பூ என்று கூறினால் மட்டும் போதுமே அதற்கான முழு அர்த்தமும் உருவாகிவிடுகிறது

"தயவு செய்து மன்னியுங்கள்

எந்தப் பூவின் பெயரும்

எனக்குத் தெரியாது.

எனக்குத் தெரிந்தது எல்லாம்

அவை பூ என்பது மட்டுமே"

இதனை கவிஞர் கல்யாண்ஜி தன் கவிதையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"ஒரே ஒரு பூ தான் பூத்தது.

ஒரே ஒரு பூவையும் பறித்து விட்டேன்.

ஒரே ஒருவின் வாசனை

எப்போதும் அலாதி"

தொட்டியில் வைத்து வளர்க்கப்படும் செடி பூப்பூக்கும் பொழுது உன் முகம் இருக்கும் திசை காட்டி பூப்பதில்லை அது அதன் இயல்பில் பூக்கும் மனிதர்களே அதை நீங்கள் போய் பார்ப்பது உங்கள் இஷ்டம் என்கிறார்

"பூ

நீ இருக்கும்

திசைக்கு முகம்காட்டி

உன் சதுரமான

எதிர்பார்ப்பின் மேல்

பூக்காது

தொட்டிப் பூ

பூ பூத்தல் அது இஷ்டம்

போய் பார்த்தல் உன் இஷ்டம்"

கவிஞர் விக்ரமாதித்யனின் இந்த கவிதையில் ஒரு பூவின் வாழ்க்கையை கூறுகிறார்.

"பூவிட்டு

காய் காய்த்து

கனிந்து உதிர

வேர்கள் வெகு ஆழமாக

மண்ணுக்குள்ளே"

## மழையும் நிலவும்

மனிதனின் அன்றாட வாழ்க்கையில் நிலவு பெரிய பங்கு வகிக்கிறது. நிலவிடம் இன்றும் பேசும் மக்கள் உள்ளார்கள் மூன்றாம் நாள் பிறையின் போது நம் மனதில் நினைப்பதை நிலவிடம் சொன்னால்

நிலா அதனை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை ஒவ்வொரு குழந்தையிடமும் இருக்கிறது, அதேபோல் நிலவினை காட்டிச் சோறு ஊட்டல் இன்றளவும் தாய்மார்களின் பெரிய ஆசையாகும்.

மழை தான் பெய்கிற நேரத்தை அழகாக தேர்ந்து எடுத்துக்கொள்கிறது. மழை பெய்யும் அழகை விட மழையை ரசிப்பவரை ரசிக்கும் அழகு அலாதியானது ஒரு சாயங்கால நேரத்தில் மழை பெய்து கொண்டிருக்கும் சமயம் பள்ளி முடிந்து. வீட்டிற்கு வந்த குழந்தைகள் மழைநீர் ரசித்தபடி உள்ளிருப்பதை விட மழையை கண்டு ஓடி வந்து தன் இரு கைகளை விரித்து நடனம் ஆடுவதை காணும் மனிதர்கள் இவ்வுலகில் மிகவும் அதிசயமானவர்கள். கல்யாண்ஜியின் உலகம் தனி அந்த உலகத்திற்கான மழையும் நிலவும் தனி தான்.

மழை உங்களிடம் இதுவரை ஏதேனும் புகார் சொல்லி இருக்கிறதா என்ற கேள்வியுடன் தொடங்கும் இக்கவிதை உங்கள் வீட்டுப் பையன் மழையில் நனையக்கூடாது என்று கூறுகிறீர்கள் உங்களுக்கு மழையை பார்த்தால் பயம் முட்டாள் பெட்டியின் முன் சாய்ந்து குறை கூறும் நீங்கள் மழையைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல் இருக்கிறீர்கள் இதுவே மனித இயல்பு.

“மழை குறித்து

மழை உங்களிடம் இதுவரை ஏதேனும் புகார்

சொல்லியிருக்கிறதா

ஒரு பச்சை புழுவைக் காணோம் வெகு நாட்களாக

ஒரு கூழாங்கல்லை ஒரு சிறுமி பொறுக்கிப் போய்விட்டதாக

ஒரு வானவில் மீன் கொத்திச் சிறகாக உதிர்ந்து விட்டதாக

நீங்கள் உங்கள் வீட்டு சிறுவனை

நனையக் கூடாது என்று தடுத்துவிட்டதாக

வெளியே வந்து எதையும் பாராமல்

முட்டாள் பெட்டி முன் நீங்கள் சாய்ந்து கிடப்பதாக

இல்லை அல்லவா

அப்புறம் நீங்கள் ஏன் மழை குறித்து

இவ்வளவு புகார்களை எல்லாரிடமும்

வீட்டுக்குள் தேநீர் அருந்திக்கொண்ட

சொல்லிக் கொண்டி இருக்கிறீர்கள்”

கவிஞர் விக்ரமாதித்தன் இன்னொரு கவிதையில் மழையின் அழகை பற்றி இவ்வாறு கூறுகிறார்.

## அமர்க்கு அழகு

குடையை பிடித்துக் கொண்டு மழையை ரசிக்க சொல்கிறார் லாலா மழையில் நனைந்து கொண்டே மழையை ரசிப்பது ரசிப்பது தான் அமர்க்கு அழகு

“பரீட்சை எழுதும் நிலா

கடைசி பரீட்சை

முடிந்த தினம்

பார்க்கும் போஸ்டர் மீதெல்லாம்

மையை உதறிப் பூப்போட்டுச்

செல்லும் ரகளை பையன்போல்-

வானம் எங்கும்

நட்சத்திர கோலம் உதறி உதறித்தன்

நீலக் கருப்பு தெரு வழியின்

ஓரம் செல்லும் கீற்று நிலா

எந்த பரிட்சை

எழுதிற்று?"

பரீட்சை எழுதிய கடைசி நாள் ஒரு மாணவனின் மகிழ்ச்சியானது தன் கையில் இருக்கும் பேனாவின் மையினை பார்க்கும் இடமெல்லாம் தெளிப்பது கவிஞரின் மனதில் வானத்தில் உள்ள நிலா இரவின் நடு ஜாமத்தில் நீலக்கருப்பு இருட்டிய தெரு வழியில் உள்ள தென்னங்கீற்றின் இடையில் கீழே தெரியும் வெளிச்சம் போல என்கிறார்.

கவிஞர் கல்யாணிஜியின் உலகத்தில் நம்மை பின்னிப் பினைய வைக்கிறது இயற்கை. உயிர்களிடத்தில் அன்பு செலுத்துங்கள் என்பது இயற்கையின் மேல் அன்பு செலுத்துதலையும் குறிக்கிறது. மனதளவில் இயற்கை மேல் அன்பு செலுத்தினால் மட்டுமே மனிதன் அன்புடன் வாழ்கிறான் என்பது அர்த்தம் ஆகும். ஒரு பூ விரியும் அழகினை பார்ப்பதும் மூன்றாம் பிறையின் நிலவொளியில் நம் மனதின் எண்ணங்களை நிலாவிடம் கூறுவதும் மழையில் இரு கைகளை நீட்டி நடனமாடும் குழந்தைகளை பார்ப்பதும் நம் மனதின் சந்தோஷமே ஆகும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கு ஏற்ப மனம் மகிழ்ந்தால் மட்டுமே அன்பான வாழ்க்கை மேற்கொள்ள முடியும் என்பதனை ஒவ்வொரு முறையும் கவிஞர் கல்யாண்ஜி தன் கவிதைகளின் வழியே புலப்படுத்துகிறார்.

## முடிவுரை

கவிஞர் கல்யாண்ஜியின் கவிதைகளில் குறிப்பிடும் அழகியலும் மனித வாழ்வும் இயற்கையோடு இயைந்து வருவதாகும் முன்பே கூறியது போல் இயற்கையும் கல்யாண்ஜியின் எழுத்துக்களும் தொப்புள் கொடி உறவே மனித வாழ்வில் கடைசியில் எங்கு நிற்பது சக மனிதனின் மீதுள்ள அன்பும் அக்கறையும் ஆகும் அதே அளவிற்கு இயற்கையின் மீதும் கருணை இருக்க வேண்டும். இவ்வுலகில் நம் மீச்சிறு வாழ்வின் பொக்கிஷம் இயற்கை தான். மனிதர்களின் வாழ்வு அற்பமானது ஒரு நாகலிங்க பூ பூக்கும் தருணத்தையும் தாழம்பூவின் அழகையும் வால் நட்சத்திரத்தின் ஒளியையும் வானவில்லின் வண்ணங்களை பார்த்து மனம் மகிழ்வதை காட்டிலும் வேறு என்ன வேண்டும் இயற்கை தன் கருணைக் கரங்களை நம்மிடத்தில் நீட்டுகிறது அதை அள்ளி அணைத்து கொள்கிறார் கவிஞர். மழையை பாருங்கள் அது உங்கள் உலகில் ஒரு வானவில்லை உருவாக்கும்.

## References


Killiyan Patlar, (2016) Ulaviyal Mikachurukamana Arimugam, Adayalam Publications, Trichy, India.

Nadarajan, T.S. (2016) Tamil Alagiyal Marabu kotpadum, New Century Book House, Chennai, India.

Vannadasan, (2016) Peyar theriyamal oru paravai, Santhiya Pathipagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License